LIBRARY
10 JUN 2013
EASTERN UNIVERSITY

# கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

## மூன்றாம் வருட/முதலாம் அரையாண்டு சிறப்புக் கல்விமாணித் தேர்வு – 2010/2011 (ஜனவரி 2013)

## EDUS 3103 முகாமைத்துவக் கொள்கைகளும் பிரயோகமும்

நேரம் : 03 மணித்தியாலங்கள்

நீர் விரும்பிய நான்கு வினாக்களுக்கு விடை தருக.

---

01.(அ) முகாமையாளர், தலைவர் இருவருக்கும் இடையிலான வேறுபாடுகளை பகுத்தாராய்க?

(07 புள்ளிகள்)

(ஆ) பாடசாலையில் அதிபர் கடைப்பிடிக்க வேண்டிய முகாமைத்துவ அணுகுமுறைகளைக் குறிப்பிட்டு விளக்குக?

(09 புள்ளிகள்)

(இ) ஒரு பாடசாலை தொடர்ந்து அபிவிருத்தி நோக்கில் செல்வதற்கும், விளைதிறன் மிக்க பாடசாலையாக உருவாகுவதற்கும் உள்வாங்க வேண்டிய விடயங்களை எடுத்துரைக்க?

(09 புள்ளிகள்)

02.(அ) நிறுவனம் ஒன்றின் உற்பத்தித் திறனை அதிகரிப்பதற்கு எல்ரன் மாயோ சில உத்திகளை மேற்கொண்டுள்ளார். அவை எந்தளவிற்குப் பொருத்தமானவை என்பதை பிறட்றிக் ரெயிலரின் கருத்துக்களுடன் தொடர்புபடுத்தி ஆராய்க?

(13 புள்ளிகள்)

(ஆ) பீட்டர் ட்ரக்கர் கூறும் முகாமைத்துவக் கருத்துக்களை நிறுவனம் ஒன்றில் நடைமுறைப்படுத்துவதில் உள்ள சாதக, பாதக தன்மைகளை பகுத்தாராய்க?

(12 புள்ளிகள்)

03.(அ) ஒரு தலைவர் நிறுவனம் ஒன்றில் தீர்மானங்களை மேற்கொள்ளும்போது கவனத்திற்கொள்ள வேண்டிய விடயங்களை எடுத்துரைக்க?

(09 புள்ளிகள்)

(ஆ) சூழ்நிலைக் கோட்பாடு எத்தகைய தலைமைத்துவ ரீதியான விடயங்களை முன்வைக்கின்றது என்பதைப் பகுத்தாராய்க?

(09 புள்ளிகள்)

(இ) "பாடசாலை அதிபர்களுக்கு முகாமைத்துவப் பயிற்சி மிகவும் அவசியமானது" இக்கூற்றின் பொருத்தப்பாட்டை ஆராய்க?

(07 புள்ளிகள்)

04. பின்வருவனவற்றை விரிவாக ஆராய்க.

(அ) முறைமைக் கோட்பாடு

(ஆ) நிறுவனம் ஒன்று இலக்குகளைத் தீர்மானிக்கும் போது கவனிக்க வேண்டிய விடயங்கள்

(இ) பாடசாலை ஒன்றில் கூட்டங்களை நடத்துவதன் அவசியம்

(ஈ) வளங்களின் பற்றாக்குறை நிறுவன அபிவிருத்தியில் ஏற்படும் பாதிப்புக்கள்

(25 புள்ளிகள்)

05.(அ) ஒரு சமூகத்தைப் பிரதிபலிப்பது அச்சமூகத்தில் உள்ள பாடசாலையாகும். பாடசாலையை அபிவிருத்தி செய்வதற்குச் சமூகத்தின் பங்களிப்பு இன்றியமையாதது. ஒரு பாடசாலை அதிபர் சமூகத்தின் ஒத்துழைப்பைப் பெற்றுக்கொள்ள அவர்களை எவ்வாறு ஊக்கப்படுத்த வேண்டும் என்பதை உதாரணங்களுடன் விளக்குக.

(09 புள்ளிகள்)

(ஆ) மின்ஸ்பேக்கின் நடிபங்குகளை அதிபர் கையாண்டு பாடசாலையை முகாமை செய்வதால் ஏற்படும் சாதகமான விடயங்களை எடுத்துரைக்க?

(09 புள்ளிகள்)

(இ) "நிறுவனம் ஒன்றின் இலக்குகளை அடைவதற்கு திட்டமிடல் அவசியமானது" இக்கூற்றின் பொருத்தப்பாட்டை விளக்குக?

(07 புள்ளிகள்)

06.(அ) பாடசாலை ஒன்றில் பல்வேறு முரண்பாடுகள், பிரச்சினைகள் ஏற்படும் போது அவற்றை முகாமை செய்வதற்கு ஒரு முகாமையாளர் என்ற வகையில் அதிபர் எவ்வாறான உத்திகளைக் கையாளலாம் என்பதனைப் பகுத்தாராய்க?

(09 புள்ளிகள்)

(ஆ) பாடசாலை ஒன்று மாற்றங்களை உள்வாங்கும்போது அப்பாடசாலையின் அதிபர்கள், ஆசிரியர்கள் ஆகியோரும் தங்களில் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும். இதன் அவசியத்தை பொருத்மான உதாரணங்கள் மூலம் நியாயப்படுத்துக?

(09 புள்ளிகள்)

(இ) முகாமைத்துவச் செயற்பாட்டில் தொடர்பாடல் மிக முக்கிய பங்கு வகிக்கின்றது. இதன் பொருத்தப்பாட்டை உதாரணம் காட்டி விளக்குக?

(07 புள்ளிகள்)

***